Ø Rgnslwn

**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8040880

1. District : மாவட்டம் Tiruppur PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 8/2024/AC/TPR Date: நாள் 08.10.202

2. (i) Act சட்டம்: The PC Act, 1988 as amended by PC (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 05.10.2024 Date to : நாள் வரை 12.30hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 08.10.2024 Time to : நேரம் வரை 12.30hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.10.2024 Time : நேரம் 19.30hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.10.2024 G.D.Vol. II Time : நேரம் 19.30hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 65 km South
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o. The Assistant Engineer Kongalnagaram, TANGEDCO Tiruppur.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Jayaraman (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. Malaiappan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 51/2024 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Workshop (g) Address : முகவரி Door No. 1/128, Jayasakthi Illam Dharapuram Road, Unjavelampatti P Pollachi Taluk, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tmt. Sathiyavanimuthu, Assistant Engineer, Kongalnagar TANGEDCO, Tiruppur

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 8/10/2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature]

15. Date & Time of despatch to the court: 08.10.2024.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
V&AC, Tiruppur.
08.10.2024

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2024/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 08.10.2024-ம் தேதி மாலை 19.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.M.ஜெயராமன், த/பெ. K.மலையப்பன், கதவு எண்.1/138, ஜெயசக்தி இல்லம், தாராபுரம் ரோடு, ஊஞ்சவேலாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி தாலுக்கா, கோயம்புத்தூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.M.ஜெயராமன், த/பெ. K.மலையப்பன், கதவு எண்.1/138, ஜெயசக்தி இல்லம், தாராபுரம் ரோடு, ஊஞ்சவேலாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி தாலுக்கா, கோயம்புத்தூர், செல்: 9524563591 பெறுநர் மதிப்புமிகு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருப்பூர் நான் கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, தாராபுரம் ரோடு, ஊஞ்சவேலாம்பட்டி ஜெயசக்தி இல்லத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் குரு காட்டேஜ் என்ற பெயரில் கிரில் ஒர்க் ஷாப் நடத்தி வருகிறேன். திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தொட்டம்பட்டி கிராமம், க.ச.எண்.122/5-ல் 1.28 ஏக்கர் மற்றும் க.ச.எண்.122/4-ல் 1.20 ஏக்கர் விவசாய நிலம் எனது பெயரிலும், க.ச.எண்.122/3-ல் 1.28 ஏக்கர் எனது மனைவி புஷ்பாதேவி பெயரிலும் விவசாய நிலம் உள்ளது. எனது மனைவி புஷ்பாதேவி பெயரில் உள்ள க.ச.எண்.122/3-ல் 1.28 ஏக்கர் நிலத்தில் ஆழ்துளை கிணறு உள்ளது. எனது மனைவி பெயரில் உள்ள விவசாய நிலத்தில் தட்கல் திட்டத்தில் 5 H.P. விவசாய மோட்டார் பம்ப் செட்டிற்கு மின் இணைப்பு வாங்க முடிவு செய்து எனது மனைவி பெயரில் 12.09.2022 தேதி ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். மேற்படி விண்ணப்பத்துடன் நிலத்திற்கான பத்திரம், பட்டா, அடங்கல், நில வரைபடம், F.M.B, விவசாய நிலத்தில் போர்வெல் இருப்பதற்கு VAO சான்று, நில உரிமை சான்று ஆகியவற்றை இணைத்தேன். கொங்கல்நகரத்தில் உள்ள

தமிழ்நாடு மின்சார வாரியம் உதவி பொறியாளர் அலுவலகம் சென்று அங்கிருந்த உதவி பொறியாளர் அவர்களை சந்தித்து ஆன்லைன் விண்ணப்பத்தை கொடுத்தேன். ஆவணங்களை சரிபார்த்துவிட்டு தட்கல் மின் இணைப்பு வழங்குவதற்கு நிலத்தில் மின்வழிப்பாதை உள்ளதா என்பதை பார்ப்பதற்கு இடத்தை பார்க்க வேண்டும் என்று சொல்லி இடத்தை பார்ப்பதற்காக என்னை அழைத்து சென்று இடத்தை பார்த்தார். அதன்பின்னர் அலுவலகம் வந்து உதவி பொறியாளர் அவர்கள் செயற்பொறியாளர் என முகவரியிட்ட ஒரு கடிதத்தை தயார் செய்து அந்த கடிதத்தில் ஏதோ எழுதிவிட்டு கடித்துடன் நான் கொடுத்த விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை என்னிடம் கொடுத்து பொள்ளாச்சியில் உள்ள செயற்பொறியாளர் அலுவலகத்தில் கொடுக்குமாறு சொன்னார். நான் 13.09.2022 தேதி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று செயற்பொறியாளர் அவர்களை பார்த்து விண்ணப்பத்தை கொடுத்தேன். செயற்பொறியாளர் அவர்கள் என்னிடம் எவ்வளவு H.P. மின் இணைப்பு கேட்டுள்ளீர்கள் என்று கேட்டார். நான் 5H.P. மின் இணைப்பு என்று சொன்னேன். அதற்கு அவர் 5H.P. க்கு தட்கல் இணைப்புக்கு ரூ.2,50,000/- ஆன்லைனில் கட்டணம் கட்ட் சொன்னார். விண்ணப்பத்தில் ஏதோ எழுதிவிட்டு என்னிடம் கொடுத்து ஆன்லைன் ரசீதுடன் கொங்கல்நகரம் AE அலுவலகத்தில் விண்ணப்பத்தை கொடுக்க சொன்னார். 14.09.2022 தேதி 5H.P. தட்கல் மின் இணைப்புக்கான கட்டணம் ரூ.2,50,000/-த்தை ஆன்லைனில் கட்டிவிட்டு ரசீதுடன் விண்ணப்பத்தை அன்றைக்கே AE அலுவலகத்தில் இருந்த பெண் ஊழியரிடம் கொடுத்தேன். அந்த ஊழியர் உங்களது விண்ணப்பம் சீனியாரிட்டி அடிப்படையில் வரும் என்றும் உங்கள் செல்போனுக்கு தகவல் சொல்வார்கள் என்று கூறினார். சுமார் 4 மாதங்கள் கழித்து மகேஷ் என்பவர் 8825838501 என்ற அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போனுக்கு அழைத்து உங்களது விண்ணப்பம் சீனியாரிட்டி அடிப்படையில் எஸ்டிமேட் தயார் செய்ய வந்துள்ளது என்றும் அதனால் உங்களது நிலத்தை பார்வையிட வேண்டும் என்று சொன்னார். நான் அன்றைக்கே அவரை அழைத்து சென்று நிலத்தை காண்பித்தேன். சுமார் ஒரு வருடம் கழித்து 3 மின்கம்பம் அமைத்து கொடுத்தனர். இந்நிலையில் தட்கல் மின் இணைப்புக்கு கம்பம் போட்டதை பக்கத்து தோட்டத்தைச் சேர்ந்த தங்கவேல் மற்றும் மாரியப்பன் ஆகியோர் அவர்களது தோட்டத்தின் வழியாக கம்பம் போட்டுள்ளதாக ஆட்சேபனை தெரிவித்து AE அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளனர். மேற்படி

ஆட்சேபனை மனு இருப்பதால் அந்த வழியாக கம்பம் போட முடியாது என்று அப்போதிருந்த பெதப்பம்பட்டி AE திரு.அசோக்குமார் அவர்கள் சொன்னார். இதனைதொடர்ந்து பெதப்பம்பட்டி AD திரு.அன்புமணி அவர்களும், AE திரு.அசோக்குமார் அவர்களும் பொட்டையம்பாளையம் ஊர் வழியாக மின் கம்பம் அமைப்பதற்காக வேண்டி இடத்தை பார்வையிட்டு அதன்பின்னர் ஊர் வழியாக மின்கம்பம் அமைத்து மின் கம்பியும் பொருத்தினார்கள். அதன்பின்னர் பலமுறை AE, AD & EE அலுவலகத்திற்கு சென்று தட்கல் மின் இணைப்பு சம்பந்தமாக கேட்ட போது அரசாங்கம் தற்போது தட்கல் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளது என்றும் அரசு உத்தரவு வந்த பின்னர் உங்களுக்கு மீட்டர் பொருத்தி சர்வீஸ் தரப்படும் என்று சொன்னார்கள். தட்கல் மின் இணைப்பு வழங்க காலதாமதபடுத்தி வந்ததால் நான் எனது மனைவி பெயரில் கண்காணிப்பு பொறியாளர், பொள்ளாச்சி அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க கோரி 14.08.2024 தேதி மனு கொடுத்தேன். 05.10.2024 தேதி காலை 11.20 மணிக்கு 97511 32137 என்ற எண்ணிலிருந்து மிஸ்டுகால் வந்தது. நான் 11.21 மணிக்கு அந்த எண்ணிக்கு தொடர்பு கொண்ட போது தான் ராஜகோபால் சிஐ பேசுவதாகவும், புஷ்பாதேவி யார் என்று கேட்டார். அதற்கு நான் எனது மனைவி என்று சொன்னேன். அவர் உங்கள் மனைவி பெயரில் சர்வீஸ் வந்துள்ளது என்று சொன்னார். அதன்பின்னர் AE பேசுவதாக சொல்லி அவரது போனை AE யிடம் கொடுத்தார். AE புஷ்பாதேவிக்கு தடகல் சர்வீஸ் வந்துள்ளது. அதற்கு எல்டி பார்ம், 200 ரூபாய் பாண்ட் மற்றும் மோட்டார் பில் வாங்கி வந்து கொடுக்க சொன்னார். நான் சுமார் 12.30 மணியளவில் AE அலுவலகம் வந்து AE அவர்களை பார்த்து எல்டி பார்ம், 200 ரூபாய் பாண்ட் மற்றும் மோட்டார் பில் ஆகியவற்றை கொடுத்தேன். அவர் அதை வாங்கிவிட்டு திங்கள், செவ்வாய் கிழமையில் உங்களுக்கு மீட்டர் வந்து விடும். போன் செய்கிறேன். ஆபீஸ் செலவுக்கு கவனித்துவிட்டு போங்க என்று சொன்னார். நான் பின்னர் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். அந்த AE பெயர் சத்தியவாணிமுத்து என்று தெரிந்து கொண்டேன். இன்று 08.10.2024 தேதி சுமார் 12.30 மணியளவில் 9080273169 என்ற எண்ணிலிருந்து AE சத்தியவாணிமுத்து என்பவர் எனது செல்போனிற்கு அழைத்து தான் கொங்கல்நகரம் AE பேசுவதாக அறிமுகப்படுத்திக் கொண்டு புஷ்பாதேவி பெயரில் மீட்டர் வந்துள்ளது. ஆபீஸ் செலவுக்கு பணம் வேண்டும் என்று கேட்டார். நான் எவ்வளவு என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.2000/- கொடுங்கள்

நான் போர்மேனிடம் மீட்டர் மாட்ட சொல்லுகிறேன் என்று சொன்னார். எனக்கு பணம் ரூ.2,000/- லஞ்சமாக கொங்கல்நகரம், AE திருமதி.சத்தியவாணிமுத்து அவர்களுக்கு கொடுக்க விருப்பமில்லை. எனவே எனது மனைவி புஷ்பாதேவி பெயரில் உள்ள விவசாய நிலத்தில் தட்கல் திட்டத்தில் 5 H.P. விவசாய மோட்டார் பம்ப் செட்டிற்கு மின் மீட்டர் பொருத்தி மின் இணைப்பு வழங்க லஞ்சம் கேட்கும் AE திருமதி.சத்தியவாணிமுத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx M.Jayaraman, 08/10/2024. Sir, Received the complaint on 08.10.2024 at 19.30 hrs and made preliminary verification between 19.30 hrs to 20.15 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.8/2024/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 08.10.2024 between 20.15 hrs to 21.15 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 08/10/2024 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of M.Jayaraman, S/o.Malaiappan, D.No.1/138, Jayasakthi illam, Dharapuram Road, Unjavelampatti Post, Pollachi Taluk, Coimbatore is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 08.10.2024.